NATIONAL ESSAY COMPETITION FOR SCHOOL CHILDREN

INSPIRING YOUNG MINDS. SECURING TOMORROW.

PROMOTING FINANCIAL LITERACY THROUGH LIFE INSURANCE

# பதிவு செய்வதற்கான வழிமுறைகள்

பதிவுப் படிவத்தை பூர்த்தி செய்வதற்கு முன் கீழ்க்கண்ட வழிமுறைகளை கவனமாக வாசிக்கவும்.

1. பதிவுப் படிவம் மாணவரின் பெற்றோர் அல்லது சட்டபூர்வ பாதுகாவலரால் மட்டுமே பூர்த்தி செய்து சமர்ப்பிக்கப்பட வேண்டும்.
2. ஒவ்வொரு மாணவருக்கும் ஒரு பதிவு மட்டுமே அனுமதிக்கப்படும். ஒரு மாணவருக்காக ஒன்றுக்கு மேற்பட்ட பதிவுகள் சமர்ப்பிக்கப்பட்டால், அவை அனைத்தும் செல்லுபடியாகாததாக கருதப்பட்டு ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது.
3. பங்கேற்பாளரின் தகவல்களைத் துல்லியமாக செயலாக்குவதற்காக, பதிவுப்படிவம் ஆங்கில மொழியில் மட்டுமே பூர்த்தி செய்யப்பட வேண்டும்.
4. வழங்கப்படும் அனைத்து தகவல்களும் முழுமையாகவும் துல்லியமாகவும் இருக்க வேண்டும். தவறான, முழுமையற்ற அல்லது தவறாக வழிநடத்தும் தகவல்கள் வழங்கப்பட்டால், அது செயல்முறையில் தாமதம் அல்லது போட்டியில் இருந்து தகுதி நீக்கம் செய்யப்படுவதற்கு காரணமாக இருக்கலாம்.
5. செல்லுபடியாகும் மற்றும் பயன்பாட்டில் உள்ள கைபேசி இலக்கமும் மின்னஞ்சல் முகவரியும் வழங்கப்பட வேண்டும். FALIA தேசிய கட்டுரைப் போட்டி தொடர்பான அனைத்து தகவல்களும், பரீட்சை விவரங்கள், அறிவிப்புகள், புதுப்பிப்புகள் மற்றும் பெறுபேறுகள் உள்ளிட்டவை, பதிவு செய்யும் போது வழங்கப்பட்ட தொடர்பு விபரங்களின் ஊடாக அனுப்பப்படும்.

6. கூகுள் படிவத்தில் (google form) 'மாணவர் தகவல்' (Student information) பிரிவின் கீழ், பின்வரும் அடையாள எண்களில் ஏதேனும் ஒன்றைச் சரியாகக் குறிப்பிடுவதை உறுதி செய்து கொள்ளவும்:

- தேசிய அடையாள அட்டை (NIC) எண் (இருந்தால் மட்டும்) அல்லது
- தபால் அடையாள அட்டை எண் அல்லது
- பிறப்புச் சான்றிதழ் எண்

மதிப்பீட்டு நடைமுறைக்கு இந்தத் தகவல் மிகவும் அவசியமானதாகும்.

7. மாணவர் போட்டித் தேர்வில் தோற்றவிருக்கும் இடத்தை இது தீர்மானிக்கும் என்பதால், விருப்பமான பரீட்சை மாவட்டத்தை கவனமாகத் தேர்ந்தெடுக்கவும். FALIA தேசிய கட்டுரைப் போட்டித் தேர்வு 2026 ஆம் ஆண்டு அக்டோபர் மாதத்தில் இலங்கையின் அனைத்து 25 மாவட்டங்களிலும் நிறுவப்படும், பரீட்சை நிலையங்களின் ஊடாக நடாத்தத் திட்டமிடப்பட்டுள்ளது. பதிவு செய்யப்பட்ட பின்னர் தேர்ந்தெடுக்கப்பட்ட பரீட்சை மாவட்டத்தை மாற்றுமாறு செய்யப்படும் கோரிக்கைகள் ஏற்றுக்கொள்ளப்படாமல் போகலாம்.

8. பதிவுப் படிவத்தை சமர்ப்பிக்கும் முன், மாணவரின் தனிப்பட்ட விவரங்கள், பாடசாலை தகவல்கள் மற்றும் பரீட்சை தொடர்பான விருப்பத் தேர்வுகள் அனைத்தும் சரியாக உள்ளிடப்பட்டுள்ளனவா என்பதை உறுதிப்படுத்தவும்.

9. பரீட்சையின் போது மாணவருக்கு ஏதேனும் விசேட உதவி தேவைப்பட்டால், அதனை தொடர்புடைய பகுதியில் குறிப்பிட்டு தேவையான விவரங்களை வழங்கவும்.

10. பதிவுப் படிவத்தை சமர்ப்பிக்கும் முன் வழங்கப்பட்ட அனைத்து தகவல்களையும் கவனமாக மீளாய்வு செய்யவும். ஒருமுறை சமர்ப்பிக்கப்பட்ட பின்னர், மாற்றங்களைச் செய்வது சாத்தியமில்லாமல் போகலாம்.

11. பதிவு செயல்முறை அல்லது IRCSL தேசிய கட்டுரைப் போட்டி தொடர்பான ஏதேனும் விளக்கங்கள் அல்லது உதவி தேவையெனில், இலங்கை காப்புறுதி ஒழுங்குமுறைப்படுத்தல் ஆணைக்குழுவை (IRCSL) **011 2396184–9** (உள் இணைப்பு எண்கள் **103, 115 அல்லது 134**) என்ற தொலைபேசி இலக்கத்தில் அல்லது **mder@ircsl.gov.lk** என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்புகொள்ளலாம்.